மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ராதாபுரம்.

முன்னிலை .திரு. ஆனந்த் , பி.ஏ.,பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் ராதாபுரம்.

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05-ம் நாள் திங்கள்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 447/2023**

அரசு சார்பாக

காவல் ஆய்வாளர்,

இராதாபுரம் காவல் நிலையம்

குற்ற எண் - 95/2022 ..... குற்றமுறையிடுபவர்

**எதிர்**

1) முப்பிடாதி, வயது 57/2022,

த/பெ. வெங்கடாசல தேவர்,

134 மறவர் காலனி,

வள்ளியூர்.

2) ஜெயசங்கர், வயது 34/2022,

த/பெ. ராமமூர்த்தி,

வடக்கு தெரு,

கும்பிகுளம் வடக்கு. ..... குற்றச்சாட்டப்பட்டவர்கள்

இவ்வழக்கானது 26/06/2023-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து மேல்விசாரணைக்காக மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம்/சிறப்பு நீதிமன்றத்துக்கு குவிமுச பிரிவு 323 -ன் கீழ் மாற்றப்படும்,

**உத்தரவு**

1) கடந்த 31.05.2022 ம் தேதி 12.30 மணிக்கு 2 வது கும்பிகுளம் ஊருக்கு கிழக்கேயுள்ள 1 வது எதிரியின் தோட்டம் அருகே உள்ள ஓடையில் 1 வது எதிரிக்கு

ANAND M Digitally signed by ANAND M Date: 2024.08.05 16:55:44 +0530

சொந்தமான TN 69 T 5724 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லருடன் கூடிய TN 72 BV 2523 என்ற பதிவெண் கொண்ட மஹிந்திரா டிராக்டரில் சுமார் 1/2 யூனிட் அளவுள்ள ஓடை மண்ணை இருவரும் சேர்ந்து எவ்வித அரசு அனுமதியின்றி சட்டவிரோதமாக இலாப நோக்குடன் மேற்படி ஓடையில் இருந்து திருடிய குற்றத்திற்காக இராதாபுரம் காவல் நிலைய ஆய்வாளர் எதிரிகள் மீது பிரிவு 379 IPC படியும் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) குற்றப் பத்திரிக்கை பரிசீலனை செய்து கு.வி.மு.ச பிரிவு 190(1)(ஆ)-ன் படி வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

3) குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. 207 – வது பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

4) குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு பிரிவு 379 IPC படியானது MMDR Act க்குள்பட்டது ஆகும். எனவே சிறப்பு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யப்படத்தக்கது என்பதாலும், மேற்படி தனிவழக்கு எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்கிற விபரம் இல்லாத நிலையில், தனிவழக்கு இருப்பின் அதனுடன் விசாரணை செய்ய வேண்டி இந்த வழக்கை இந்நீதிமன்றம் மேல் விசாரணைக்காக மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம்/சிறப்பு நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச. 323 பிரிவின் கீழ் உத்தரவிடப்படுகிறது.

5) குற்றச்சாட்டப்பட்டவர்கள் மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம்/சிறப்பு நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட வேண்டிய வழக்கு என்ற விபரத்தை தெரிவித்து மேற்படி நீதிமன்றத்தில் விசாரணையின் போது தங்கள் தரப்பில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உள்ளதா என்று கேட்டபோது **வசதி உள்ளது** என்று கூறியதை பதிவு செய்து, இவ்வழக்கை மேல்விசாரணைக்காக மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம்/சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்படும் விபரம் குறித்து மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற குற்றத்துறை வழக்கறிஞருக்கு

ANAND M

Digitally signed by ANAND M
Date: 2024.08.05 16:55:51 +0530

தகவல் அளிக்கவும் உத்தரவிடப்படுகிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம்/சிறப்பு நீதிமன்றத்தில் **20.08.2024-ம்** தேதி காலை 10.00 மணிக்கு ஆஜராக வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்து என்னால் சரிபார்த்து 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05- ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ANAND M
Digitally signed by ANAND M
Date: 2024.08.05 16:55:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், ராதாபுரம்.